# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073030
C

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் VSAC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 4 Date: நாள் 25.7.19

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 27.1.19 to 24.7.19.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.7.19 Time : நேரம் 15.00 Hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ வடகிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம். கிக்கலூர், ஒட்டன்சத்திரம் ... .

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. தங்கராஜ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் காளியப்பன்.

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 40 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் விவசாயம். (g) Address முகவரி L.1305, 6வது தெற்கு ரோடு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

நி. சாந்தா, கிராம நிர்வாக அலுவலர், கிக்கலூர், ஒட்டன்சத்திரம் தாலுக்கா திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 25.07.2019-ம் தேதி 15.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது சென்னை, திருவான்மியூர், திருவள்ளுவர் நகர், L.1305, 6வது மெயின் ரோட்டை சேர்ந்த திரு.காளியப்பன் மகன் திரு.கா.சுப்பிரமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் கீழ்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: கா.சுப்பிரமணி, த/பெ காளியப்பன், L.1305, 6வது மெயின் ரோடு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் தச்சராக பணிபுரிந்து வருகின்றேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை தாலுகா, கரிக்காலி கிராமம், வசவநாயக்கன்பட்டி ஆகும். எனது அப்பா திரு.காளியப்பன் கரிக்காலி கிராமம், வசவநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகின்றார். எனது அப்பாவிற்கு இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு தம்பியும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கா சுப்பிரமணி

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

25/7/19.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.7.19.

Name: பெயர் ......................
Rank: நிலை ...................... No. எண் ..........

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:4/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

உள்ளனர். கடந்த 26.06.2019ம் தேதி குஜிலியம்பாறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1038/2019ன் படி, பழநி ரிடி, குஜிலியம்பாறை சப்ரிடி, வேடசந்தூர் தாலுகா, கரிக்காலி கிராம புல அயன் புல சர்வே எண். 756/1A ல் 43 செண்டு இடத்தினை திருமதி.காமாட்சி, க/பெ தங்கவேல் அவர்களிடமிருந்து எனது அப்பா கிரையமாக பெற்றார். மேலும் அன்றைய தினமே குஜிலியம்பாறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1039/2019ன் படி, பழநி ரிடி, குஜிலியம்பாறை சப்ரிடி, வேடசந்தூர் தாலுகா, கரிக்காலி கிராம புல அயன் புல சர்வே எண். 756/1ஈ ல் 44 செண்டும், அயன் புல சர்வே எண். 756/1ல் 52 செண்டும், ஆக மொத்தம் 96 செண்டு இடத்தினை திருமதி.மாணிக்காயம்மாள் அவர்களிடமிருந்து எனது அப்பா கிரையமாக பெற்றார். பத்திரப் பதிவின் தொடர்ச்சியாக பட்டா மாறுதல் செய்யும் பொருட்டு பதிவு விவரங்களை குஜிலியம்பாறை புத்தகம் (1/1038/2019) விண்ணப்ப எண். 2019/0103/13/085199 ன் படி வட்டாச்சியர் அலுவலகத்திற்கு கடந்த 26.06.2019ம் தேதி அன்று அனுப்பிவைக்கப்பட்டு, ஒப்புகைச் சீட்டு எண்.TNIGRS/2019/Rural/ 14816474/26062019165045 மற்றும் குஜிலியம்பாறை புத்தகம் (1/1039/2019) விண்ணப்ப எண். 2019/ 0103/13/085209 ன் படி வட்டாச்சியர் அலுவலகத்திற்கு கடந்த 26.06.2019ம் தேதி அன்று அனுப்பிவைக்கப்பட்டு, ஒப்புகைச் சீட்டு எண்.TNIGRS/2019/Rural/ 14816646/26062019171448 எனது அப்பாவிற்கு வழங்கப்பட்டது. எனது அப்பாவிற்கு வயதாகிவிட்டதாலும், மேலும் உடல்நிலை சரியில்லாததாலும் நான் அவரது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டி கடந்த 27.06.2019ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் குஜிலியம்பாறையில் இயங்கிவரும் கரிக்காலி கிராம நிர்வாக அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைராஜ் அவர்களை சந்தித்து மேற்கண்ட இரண்டு பத்திர நகல்கள் மற்றும் இரண்டு ஒப்புகைச் சீட்டுகளையும் கொடுத்து எனது அப்பா பெயரில் பட்டா பெயர் மாறுதல் செய்து தருமாறு கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைராஜ் அவர்கள் ஒரு பட்டா மாறுதலுக்கு ரூ.6,000/-ம் வீதம், இரண்டு பட்டா மாறுதலுக்கு ரூ.12,000/- கேட்டார். அப்பொழுது நான், ரூ.12,000/-ம் அரசுக்கு கட்டவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர், இல்லை மேற்கண்ட இடங்களுக்கு பட்டா மாறுதல் செய்ய எனது பரிந்துரையினை வட்டாச்சியருக்கு அனுப்புவதற்கு ஆகும் செலவு எனக் கூறினார். நான் பணத்தை புரட்டிவிட்டு வருகின்றேன் எனக் கூறிவிட்டு சென்னைக்கு சென்றுவிட்டேன். அதன் பின்பு மீண்டும் 12.07.2019ம் தேதி பகல் சுமார் 12 மணிக்கு கரிக்காலி கிராம நிர்வாக அலுவலரை குஜிலியம்பாறையில் இயங்கிவரும் கரிக்காலி கிராம நிர்வாக அலுவலகம் சென்று சந்தித்து எனது அப்பாவின் பெயரில் பட்டா மாறுதல் வேண்டி அனுப்பப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட ரூ.12,000/- பணத்தினை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். மேலும் அந்த பணத்தினை கொடுத்தால்தான் மேற்கண்ட இடங்களுக்கு பட்டா பெயர் மாறுதல் செய்து தரமுடியும் என கறாராக கூறிவிட்டார். எனவே நான் பணம் தயார் செய்து வருவதற்காக சென்னைக்கு சென்றுவிட்டேன். அதன் பின்பு மீண்டும் 24.07.2019ம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு கரிக்காலி கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைராஜ் அவர்களை குஜிலியம்பாறையில் உள்ள கரிக்காலி கிராம நிர்வாக

அலுவலகத்தில் சென்று எனது அப்பாவின் பெயரில் பட்டா மாறுதல் செய்வது தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.12,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா எனக் கேட்டார். அதற்கு நான் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.4,000/-த்தை குறைத்து கொண்டு ரூ.8,000/- த்தினை 26.07.2019ம் தேதி அவரது அலுவலகத்தில் கொண்டு வந்து தருமாறும், மேலும் வரும்போது அவருடைய செல்போனில் பேசிவிட்டு வருமாறும் என்னிடம் கூறினார். இந்நிலையில் எனது அப்பா பெயரில் உள்ள மேற்கண்ட நிலங்களுக்கு பட்டா பெயர் மாறுதல் பெறுவதற்கு ரூ.8,000/- லஞ்சமாக கரிக்காலி கிராம நிர்வாக அலுவலருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால் என்னிடம் ரூ.8,000/- லஞ்சமாக கேட்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.துரைராஜ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு, இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன். இம்மனுவுடன் மேற்படி அலுவலகத்தில் நான் கொடுத்த இரண்டு பத்திர நகல்கள் மற்றும் குஜிலியம்பாறை பத்திர பதிவு அலுவலகத்திலிருந்து வேடசந்தூர் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட ஒப்புகை சீட்டுகள் ஆகியவற்றின் நகலினை இணைத்தும், மேலும் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (கா.சுப்பிரமணி, 25.07.2019)

Sir, Received the complaint on 25.07.2019 at 15.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.04/2019, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 25.07.2019 at 17.00 hrs and took up investigation.

Original FIR along with written complaint of Tr.K.Subramani, S/o Kaliappan, L.1305, 6th Main Road, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai – 41 and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

25/7/19

(R.Geetha)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.